# Tamil Murli Quiz 12-11-2015

தமிழ் முரளி வினாடி-வினா
முரளியினை மறுமுறை நினைவுற உதவும் வினாடி-வினா. இன்றைய முரளியிலிருந்தே கேள்விகள் கேட்கப்படும்.
இங்கே கிளிக் செய்க: 20 நிமிட முரளியின் எம்பி3 கோப்புகள் மற்றும் பழைய வினாடி-வினா.abc

**Q.1)** <u>சரியான விடை கொண்டு வாக்கியத்தை முடிக்கவும்:</u>
**இந்த கண்ணாமூச்சி விளையாட்டில் யார் சிக்கிக்கொள்ள மாட்டார்கள் என்று பாபா கூறுகிறார்?**

- **A.** நிச்சய புத்தி உள்ளவர்கள்
- **B.** தந்தையின் நினைவில் உள்ளவர்கள்
- **C.** தந்தையின் ஸ்ரீமத் படி நடப்பவர்கள்
- **D.** தந்தையின் நினைவில் சேவை செய்பவர்கள்

**Q.2)** <u>சரியான விடையை தேர்வு செய்யவும்:</u>
**இறுதிக் காலத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாலும் குழந்தைகளாகிய உங்களின் கடமை என்ன என்று பாபா கூறுகிறார்?**

- **A.** துக்கத்தில் இருப்பவர்களுக்கு ஒரு சொட்டு அமைதியையாவது கொடுப்பது
- **B.** தந்தையைத் தவிர வேறு யாரையும் நினைவு செய்யாமல் இருப்பது
- **C.** படிப்பில் நல்ல விதமாக ஈடுபடுவது. வேறு விஷயங்களில் கவனம் செலுத்தாமல் இருப்பது
- **D.** தைரியத்துடன் கடைசி வினாசத்தின் காட்சிகளைப் பார்ப்பது

**Q.3)** <u>சரியா? தவறா?:</u>
**காட்டில் தான் எப்போதும் தீப்பிடிக்கிறது. மலர் தோட்டத்தில் ஒருபோதும் தீ பிடிப்பதில்லை. இந்த பழைய உலகம் கூட காடு தான். இதில் கண்டிப்பாக தீப்பற்றப் போகிறது. பழைய உலகின் வினாசத்திற்குப் பிறகு தான் புதிய உலகம் உருவாகும்.**

- **A.** சரி
- **B.** தவறு

**Q.4)** <u>சரியான விடையை தேர்வு செய்யவும்:</u>
**குழந்தைகளுக்கு எந்த நிச்சய புத்தி ஏற்படுவதில் நிறைய உழைக்க வேண்டி உள்ளது என்று பாபா கூறுகிறார்?**

- **A.** நான் ஆத்மா . இந்த உடல் இல்லை என்பதைப் புரிந்து கொள்வதில்
- **B.** ஆத்மா தான் வித விதமான சரீரங்களை எடுக்கிறது என்பதில்
- **C.** பதீதில் இருந்து பாவனமாக ஆவதில்
- **D.** காம விகாரம் என்ற மாயா மேல் வெற்றி அடைவதற்கு

**Q.5)** <u>சரியான விடையை தேர்வு செய்யவும்:</u>
**முதன் முதலாக தந்தையிடம் யார் வருகிறார்கள்?**

- **A.** தேவதைகளாக இருந்தவர்கள்
- **B.** பிரம்மச்சரியத்தை கடை பிடிப்பவர்கள்
- **C.** நிறைய தான, தர்மம் செய்தவர்கள்
- **D.** அதிகமாக பக்தி செய்துள்ளவர்கள்

**Q.6)** <u>சரியா? தவறா? :</u>
**லட்சுமி-நாராயணரின் கோவிலுக்கு நிறைய மனிதர்கள் செல்கின்றனர். இவர்கள் தான் உலகின் எஜமானராக இருந்தனர். இவர்களுடைய ராஜ்யத்தில் கண்டிப்பாக சுகமும், அமைதியும் இருந்தது என்று அனைவருடைய புத்தியிலும் உள்ளது.**

- **A.** சரி
- **B.** தவறு

**Q.7)** <u>சரியான விடையை தேர்வு செய்யவும்:</u>
**உண்மையில் சத்தியமான தீபாவளி என்பது ____________________ ஆகும்.**

- **A.** ஆத்ம தீபத்தை ஏற்றுவது
- **B.** பட்டாபிசேக நாளை கொண்டாடுவது.
- **C.** சுகம், சாந்தியின் நாட்களை கொண்டாடுவது
- **D.** நினைவின் யாத்திரை தான்

***Q.8)*** **<u>சரியான விடை கொண்டு வாக்கியத்தை பூர்த்தி செய்யவும்:</u>**
**_________________ ஒரு போதும் தந்தை என்று யாரும் சொல்வதில்.**

**A.** ○ விஷ்ணுவை
**B.** ○ பிரம்மாவை
**C.** ○ பிரஜாபிதாவை
**D.** ○ லட்சுமி-நாராயணரை

***Q.9)*** **சரியான விடையை தேர்ந்தெடுக்கவும் :**
**சுத்த சங்கல்பங்களின் இருப்பின் மூலம் ____________________ அனுபவமிக்கவர் ஆகுக.**

**A.** ○ ஸ்வ ஸ்திதியின்
**B.** ○ மன சேவையின்
**C.** ○ வள்ளலின்
**D.** ○ உலக நன்மை செய்பவரின்

***Q.10)*** **சரியான விடையை தேர்ந்தெடுக்கவும் :**
**மனதால் எப்போதும் பொறாமை - விரோதத்திற்கு விடை கொடுத்தால் ______________ ஏற்படும்.**

**A.** ○ அமைதி
**B.** ○ திருப்தி
**C.** ○ வெற்றி
**D.** ○ அன்பு